## வ/ப களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை கம்பனி – 2021/ 2022

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வ/ப களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை கம்பனியின் (“கம்பனி”) 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற

தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 31 ஆம் பந்திக்கமைய கிடைத்த வட்டி வருமானம் காசு பாய்ச்சல் கூற்றில் தனியாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டினுள் கிடைத்த மொத்த வட்டியின் பெறுமதியான ரூபா.7,507,766 | ரூபா.1,776,466 தொகை பெறவேண்டிய வருமானங்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வட்டி வருமானம் காசுப்பாய்ச்சல் கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையில் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா.5,739,106 மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதற்கமைய ரூபா.1,768,660 குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் கம்பெனியின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா.343,017,568 தொகைக்கு மீள் மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இலங்கை கணக்கிட்டு நியம இலக்கம் 16 இன் 77 ஆம் பந்திக்கமைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண வகுப்பின் மீள் மதிப்பீட்டு பெறுமதிகள் வெளிப்படுத்தப்படும் போது மீள் மதிப்பீடு நடைமுறைப்படுத்தப்படும் திகதி, சுயாதீன மதிப்பீட்டாளர் ஒருவரை பயன்படுத்த வேண்டுமா என்பது உள்ளடங்கலாக நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டிய மேற்குறித்த பந்தியின் (அ) முதல் (ஏ) வரையான பந்திகளில் குறித்த விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் மீள் மதிப்பீட்டிற்கு உரிய விடயங்கள் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 36 ஆம் இலக்கத்தின் பந்திக்கமைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண உருப்படிகள் மீள் மதிப்பீடு செய்யப்படும் போது அந்த சொத்துக்களுக்கு உரிய ஆதனங்கள். பொறிகள் மற்றும் உபகரண வகுப்பு மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் காணிகளின் மீள் மதிப்பீட்டின் போது தேரங்கல காணி மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தாரங்கல காணியின் மீள் மதிப்பீடு நடவடிக்கைகள் இடம்பெற்றவாறு உள்ளதுடன் மீள் மதிப்பீடு நிறைவடைந்தவுடன் உடனடியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் தாரங்கல காணி மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37 இன் 27 மற்றும் 86 ஆம் பந்திகளுக்கு அமைய மீளாய்வாண்டின் இறுதி அளவில் சுவீரிக்கப்பட்டிராத காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குரிய ஹினிதும ஹில்ஸ் தேயிலை தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டுள்ள காணி குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு உடன்படிக்கை ஒன்றினை கைச்சாத்திடும் நோக்கில் 2021 செப்டம்பர் 23 ஆம் திகதி ஆணைக்குழுவினால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்த போதிலும் குறித்த விடயம் தொடர்பில் எந்த வெளிப்படுத்தலும் நிதிக்கூற்றுகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2019.03.19 ஆம் திகதி ஹினிதும ஹில்ஸ் தேயிலை தொழிற்சாலை களுபோவிடியான தேயிலை தொழிற்சாலை கம்பெனிக்கு சுவீரிப்பதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. 2012 ஆம் ஆண்டு முதல் 2019.03.19 ஆம் திகதி வரையிலும் குத்தகை செலுத்துவதற்கு குத்தகை உடன்படிக்கை ஒன்றோ அல்லது வேறு சட்ட ரீதியான ஆவணம் ஒன்றோ காணப்படவில்லை. அதனால் 2019.03.19 ஆம் | குத்தகை உடன்படிக்கை மற்றும் தொடர்புடைய நிகழத்தக்க பொறுப்புக்கள் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37 இன் பிரகாரம் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திகதி குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு காணிகள் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரையிலும் பதில் ஒன்று கிடைக்கவில்லை. குத்தகை உடன்படிக்கை இல்லாமையால் குத்தகை தொகை நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | |
| (உ) தென் மாகாண மதிப்பீட்டு அலுவலகத்தினால் வெளியிடப்பட்டிருந்த MRII/LM/3574 ஆம் இலக்க 2021 மார்ச் 25 ஆம் திகதிய மதிப்பீட்டு அறிக்கைக்க களுபோவிடயான மற்றும் தேரங்கல தேயிலை தொழிற்சாலைகளின் சொத்துக்களில் 2019 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளபடியான சந்தை பெறுமதி மீளாய்வாண்டின் சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு பெறுமதியாக கருத்தில் கொள்ளப்பட்டு புத்தகங்களுக்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 77 ஆம் பந்திக்கமைய நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் மீள் மதிப்பீட்டு பெறுமதிக்குரிய தகவல்கள் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஹினிதும ஹில்ஸ் மற்றும் மெனிக்திவல தேயிலை தொழிற்சாலைகளின் சொத்துக்கள் கம்பெனிக்கு சுவீகரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் இரு தொழிற்சாலைகளினதும் காணிகள் நீங்கலாக ஏனைய அனைத்து சொத்துக்களினதும் பெறுமதி ரூபா.44,064,020 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் இச் சொத்துக்களிடையே கட்டிடங்கள் நீங்கலாக ஏனைய சொத்துக்கள் மீள் மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் தேயிலை சக்தி நிதியத்திற்கு வழங்கப்பட்ட ரூபா.50 மில்லியனான மொத்த கடன் தொகையில் குறித்த பகுதி அந்த சொத்துக்களுக்கு சீராக்கப்படாது மொத்த | அமைச்சரவை தீர்மானத்திற்கமைய ஹினிதும ஹில்ஸ் மற்றும் மனிக்திவல தேயிலை தொழிற்சாலைகள் எமது கம்பனிக்கு செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு சுவீரிக்கப்பட்ட போதிலும் காணியின் உரித்து நிறுவனத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டவாறு | அமைச்சரவை தீர்மானங்களுக்கமைய தேயிலை தொழிற்சாலைகளின் உரித்தினை கம்பனிக்க சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து கடன் தொகையை சீராக்கல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடன் தொகையும் நிதிக்கூற்றுகளில் குறுங்கால முதலீடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | உள்ளதுடன் இந்த ஆண்டில் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். காணியியன் உரித்தினை சுவீகரித்த பின்னர் ரூபா.50,000,000 அன சொத்துக்களுக்குரிய சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | சேமலாப நிதிய பங்களிப்பினை கணிப்பிடும் போது அடிப்படைச் சம்பளத்திற்கு வாழ்க்கைச் செலவின படிகளை சேர்த்து அந்த ஈட்டத்தின் அடிப்படையில் பங்களிப்புத் தொகை கணிப்பிடப்பட வேண்டிய போதிலும் 2017/2018 ஆம் ஆண்டு வரையிலும் கம்பனியினால் வாழ்க்கை செலவினப்படி கருத்தில் கொள்ளாது சேம நிதிய பங்களிப்பு கணிப்பீடு செய்யப்பட்ட காரணத்தால் 2012/2013 ஆம் ஆண்டு முதல் 2017/2018 ஆம் ஆண்டு வரையிலும் சேம நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய நிலுவை பங்களிப்பு ரூபா.1,695,177 மற்றும் அதன் அடிப்படையில் செலுத்த வேண்டிய மிகை கட்டணம் ரூபா.847,589 என்பதால் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் கம்பனி இச் செலவீனத்திற்காக நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கம் ஒன்றினை மேற்கொண்டிருக்கவில்லை. | 2012/2013 ஆம் ஆண்டு முதல் வாழ்க்கை செலவின படிகளை கருத்தில் கொள்ளாது சேம நிதிய பங்களிப்பு கணிப்பிடப்பட்டமையால் சேம நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய பணத்தின் அளவோ கம்பனியின் நிதி நிலைமையை சீராக்கப்பட்டதுடன் உடனடியாக செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை மீதிகளை ஊழியர் சேம நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டும். நிதிய பங்களிப்பினை கணிப்பீடு செய்யும் போது வாழ்க்கை செலவின படிகளை கருத்தில் கொள்ள வேண்டும். |
| (இ) | செலுத்த வேண்டிய வருமான வரிக்கு ஈடுசெய்ய முடியாத முன் கொண்டு செல்வதற்கு இயலுமான கால எல்லையான 03 வருடங்களை விஞ்சியுள்ள 2016/2017 மற்றும் 2019/2020 மதிப்பீட்டு ஆண்டுகளுக்காக உரிய ரூபா.4,611,778 ஆன பெற வேண்டிய பொருளாதார சேவை கட்டணம் மற்றும் 2016/2017 முதல் 2018/2019 மதிப்பீடு ஆண்டுகளுக்காக உரிய ரூபா.2,075,318 ஆன நிறுத்தி வைத்தல் வரி செலவினம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் நிதிக்கூற்றுக்களில் நடைமுறை சொத்துக்கள் அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடமுடியாத அல்லது மீளளிப்பு செய்ய முடியாத குத்தகை மீதியை பதிவழிக்க வேண்டும். |
| (ஈ) | 2022 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக மக்கள் வங்கியின் சேமிப்பு கணக்கில் மீதி ரூபா.2,704,918 ஆக | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வட்டி வருமானத்தை இனங்கண்டு கணக்கு வைக்க நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்ட போதிலும் அதன் அடிப்படையில் ஈட்டப்பட்டிருந்த வட்டி வருமானம் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | | எடுக்க வேண்டும். |
| (உ) | தேரங்கல, ஹினிதும மற்றும் மெனிக்திவெல தொழிற்சாலைகளின் இறுதி உற்பத்தி தேயிலை இருப்பின் பெறுமதி முறையே ரூபா.23,955 இனால் குறைத்தும் ரூபா.807,543 மற்றும் ரூபா.159,404 அதிகரித்தும் நிதிக்கூற்றுகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய மொத்த இறுதி உற்பத்தி தேயிலை இருப்பின் பெருமதியானது ரூபா.942,992 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேரங்கல, ஹினிதும ஹில்ஸ் மற்றும் மெனிக்திவெல ஆகிய தேயிலை தொழிற்சாலைகளின் இறுதி உற்பத்தி தேயிலை இருப்பின் பெறுமதி சரியானதாகும். | ஆண்டின் இறுதியில் உள்ளபடியான பௌதிக இருப்பு அறிக்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் பட்டோலைகளுக்கிடையே வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டமையால் பௌதிக இருப்பு அறிக்கைகளுக்கமைய இருப்பு மீதியை கணக்குகளில் உள்ளடக்க வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டினுள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் சுவீகரிப்புகளாக ரூபா.22,390,227 தொகை நிதிக்கூற்றுகளில் மூலதனமாக்கபட்டிருந்த போதிலும் ரூபா.15,043,639 ஆன சுவீகரிப்புகள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் சுவீகரிப்புத் தொகை சரியானதாகும். | ஆண்டினுள் கொள்வனவு செய்யப்படும் நடைமுறை அல்லாத சொத்துக்களை உரிய முறையில் இனங்கண்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | தேரங்கல தேயிலை தொழிற்சாலையில் வங்கி இணக்கக்கூற்று உரிய முறையில் தயாரிக்கப்பட்டிராததுடன் மாதாந்த கணக்கு அறிக்கைகள் மற்றும் வங்கி கணக்கு கூற்றுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளை ஒப்பிடும் போது ஒவ்வொரு மாதமும் மீதிகளில் வேறுபாடு ஒன்று வெளிப்படுத்தப்பட்டதுடன் 2022 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ள படியாக அந்த வேறுபாடு ரூபா.657,941 ஆக நிலவியது. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வங்கி இணக்கக்கூற்றினை உரிய முறையில் தயாரித்தல் மற்றும் துரிதமாக மாற்றமடைவதை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 ஆம் ஆண்டு முதல் தனியார் தேயிலை தரகு நிறுவனம் ஒன்றில் இருந்து கம்பெனிக்கு பெறவேண்டிய ரூபா.798,461 தொகை முன் கொண்டு வரப்பட்டவாறு காணப்பட்டதுடன் அதனை அறவிடுவதற்கு | கம்பனியின் பங்குதாரர்கள் தொடர்பில் ஆராய்வதற்கு கம்பனியின் பதிவாளருக்கு 2022.10.17 ஆம் திகதி கடிதம் ஒன்று | குறித்த தொகையை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வு திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய இந்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (ஆ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளிலிருந்து முன் கொண்டு வரப்படும் வியாபாரம் மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதி மற்றும் ஏனைய முற்பண மீதி ஆகியன முறையே ரூபா.1,626,269 மற்றும் ரூபா.1,408,881 இணை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய மீதிகளை துரிதமாக அறவிடுவதற்கும் ஏனைய முற்பணங்களை பொறுப்பு கூற வேண்டிய நிறுவனங்களில் இருந்தும் உத்தியோகத்தர்களின் ஊடாகவும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கம்பனியினால் 2013 முதல் 2020 செப்டம்பர் 08 வரையிலுமான காலப்பகுதியில் தலைமை அலுவலகத்தில் பேணிச் செல்லப்படும் வாடகை கட்டிடம் மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட போது செலுத்தப்பட்ட ரூபா.1,440,000 ஆன வைப்புத்தொகை தலைமை அலுவலகம் மற்றுமொரு கட்டிடத்திற்கு கொண்டு கொண்டு செல்லப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிட தவறவிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வைப்புத் தொகையை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | ஹினிதும ஹில்ஸ் தொழிற்சாலையின் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்படும் பச்சை தேயிலை கொழுந்து விநியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள முற்பண தொகைகளுக்கு உரியதாக ஈடுசெய்யப்படாத ரூபா.949,020 ஆன பெற வேண்டிய மீதிகளில் மீளாய்வாண்டின் இறுதி அளவில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு மாதாந்த கூட்டங்கள் நடாத்தப்படுவதுடன் இதுவரையிலும் பெற வேண்டிய மீதிகள் ரூபா.748,322 வரை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த பெறவேண்டிய மீதிக்குரிய தரப்பினருக்கு போலீசில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுட ன் குறித்த தரப்பினருக்கு அழைப்பானை அனுப்பப்பட்டுள்ளது. | உரிய முற்பண தொகையை துரிதமாக அறவிடுவதற்கு அல்லது அதற்கு பதிலாக கொழுந்து விநியோகஸ்தர்களிடமிருந்து தேயிலை கொழுத்தினை பெற்றுக் கொள்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2003 ஆம் ஆண்டில் பி.சி.சி.லங்கா லிமிடெட் கம்பனிக்கு ரூபா.10,000,000 ஆன கடன் தொகை 22 வீத வட்டி வீதத்தின் அடிப்படையில் 12 தவணைகளில் | பி.சி.சி.லங்கா லிமிடெட் கம்பனியிலிருந்து பெறவேண்டிய வட்டி தொகையான | வட்டி தொகையை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அறவிடும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் ஆரம்பப்பணம் 2022 ஜுன் 22 ஆம் திகதி மீள செலுத்தப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய ரூபா.51,118,341 ஆன வட்டி தொகை 2022 நவம்பர் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை | ரூபா.51,118,341 ஆன தொகை மூன்று தவணைகளில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

## 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காசோலைகள் இரத்து செய்யப்படல் மற்றும் உழைக்கும் போது செலுத்தல்கள் மிகை கட்டணம் முறையே ரூபா.903,380 மற்றும் ரூபா.59,344 தொகை அட்டுறு செலவினக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் மீளாய்வாண்டின் இறுதி அளவில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த மீதிகளை துரிதமாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தேயிலை சக்தி நிதியத்திற்கும் மேலும் இரு தனியார் கம்பனிகளுக்கும் செலுத்த வேண்டியதாக ரூபா.3,710,375 கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கடன்கொடுத்தோரால் இந்த பணத்திற்கு உரித்து கோரப்படாதமை சர்ச்சைக்குரிய விடயமாக அவதானிக்கப்படுகிறது. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | துரிதமாக தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது உரித்து கோரபடாவிடின் அது தொடர்பில் உறுதிப்படுத்தி வருமானத்துக்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | வியாபார கடன்கொடுத்தோரின் கீழ் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்படும் ரூபா.1,582,797 பெறுமதியான மீதி ஒன்றை தீர்ப்பனவு செய்வதற்கு மீளாய்வண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வியாபார கடன்கொடுத்தோர் மீதியை எதிர்காலத்தில் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய தரப்பினர்களை சரியாக இனங்கண்டு துரிதமாக தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது உரித்து கோரப்படாவிடின் அது தொடர்பில் உறுதிப்படுத்தி வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) 8.2.2 ஆம் பிரிவு | நிதிய முதலீடுகளில் நிதி அமைச்சரின் இணக்கப்பாடு மற்றும் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2022 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ள படியாக கம்பனியால் ரூபா.110,119,465 தொகை குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | களுபோவிடயான தேயிலை தொழிற்சாலை கம்பனி, கம்பனிகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளதுட ன் கம்பனிகளின் தீர்மானம் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படும். அதற்கமைய குறுங்கால முதலீடு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்டே முதலீடு செய்யப்பட்டுள்ளது. | குறித்த அமைச்சரின் அங்கீகாரம் மற்றும் நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் முதலீடு செய்யப்பட வேண்டும். |
| (ii) 9.14 ஆம் பிரிவு | மனிதவள முகாமைத்துவத்திற்காக சட்டங்கள், விதிகளை உருவாக்குவதற்குரிய செயல்வழிக் கையேடொன்று தயாரிக்கப்பட்டு திறைசேரியின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்ப வேண்டிய போதிலும், கம்பனியால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மனிதவள முகாமைத்துவத்திற்க ாக சட்டங்கள் மற்றும் விதிகளை உருவாக்குவதற்காக உரிய செயல்வழிக் கையேடொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயல்வழிக் கையேட்டினை துரிதமாக தயாரித்து உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 2,764,772 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய பற்றாக்குறை ரூபா 15,144,959 ஆகும். அதன் பிரகாரம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 12,380,187 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு நிர்வாக மற்றும் நிதிச் செலவினம் கடந்த ஆண்டுக்கு ஒப்பாக ரூபா 12,104,410 இனால் வீழ்ச்சியடைந்தமை மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 4,763,170 இனால் அதிகரித்தமை ஆகியன பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

கடந்த வருடத்திற்கு ஒப்பாக கம்பனியின் விற்பனை வருமானம் 11 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதுடன் இந்த குறைவிற்கு பிரதானமாக ஹினிதும ஹில்ஸ் தொழிற்சாலையின் விற்பனை வருமானம் 29 சதவீதத்தினால் குறைவடைந்தமை மற்றும் களுபோவிடயான தொழிற்சாலையின் விற்பனை வருமானம் 12 சதவீதத்தினால் குறைவடைந்தமை தாக்கம் அளித்துள்ளதாக அவதானிக்கப்படுகிறது. அவ்வாறே நிலையான வைப்பு வட்டி வருமானம் கடந்த வருடத்திற்கு ஒப்பாக குறைவடைந்த காரணத்தால் மீளாய்வாண்டின் நிதி வருமானம் 26 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்துள்ளது. செலவின அலகு பகுப்பாய்வில் விற்பனை கிரயம் உள்ளடங்களாக ஏனைய பிரதான செலவினங்கள் கடந்த வருடத்திற்கு ஒப்பாக 11 சதவிதம் முதல் 62 சதவிதம் வரை குறைவடைந்துள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்தின் நடைமுறை விகிதம் 2:1 ஆக மாற்றம் அடையாது காணப்பட்டதுடன் கடந்த வருடத்தின் 1.6:1 ஆக காணப்பட்ட துரித சொத்துக்கள் விகிதம் மீளாய்வாண்டில் 1.4 : 1 ஒன்று ஆக காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே கம்பனியின் மொத்த இலாப விகிதத்தினை கருத்தில் கொள்ளும்போது கடந்த வருடத்தில் காணப்பட்ட 1.4 விகிதம் மீளாய்வாண்டில் மாற்றமின்றி காணப்பட்டதுடன் தேறிய இலாப விகிதம் கடந்த வருடத்தில் நிலவிய 1.2 விகிதமான மறை பெறுமதியானது மீளாய்வாண்டில் 0.7 விகிதமான மறை பெறுமதியாக தொடர்ந்தும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | களுபோவிடியான தேயிலை தொழிற்சாலை அமைந்துள்ள ரூபா.23,000,000 ஆன மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டுள்ள 3.31 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணியில் 1989 - 1996 காலப்பகுதியில் 15 அத்துமீறிய குடியிருப்பாளர்கள் குடியேறியுள்ளபோது அவர்களை அகற்றுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்துமீறி குடியேறியுள்ளதாக பிரதேச செயலாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. பிரதேச செயலாளரினால் அரச அளவீட்டு திணைக்களத்தின் ஊடாக நிலத்தின் அளவீட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அத்துமீறிய குடியிருப்பாளர்களின் | சட்ட நடவடிக்கைகள் மூலம் அத்துமீறிய குடியிருப்பாளர்கள் அகற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காணிகளுக்கு நிலவும் சட்ட ரீதியான உரித்து பரிசோதிக்கப்பட்டு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | தேயிலை சக்தி நிதியத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட ஹினிதும ஹில்ஸ் மற்றும் மனிக்டிவல தேயிலை தொழிற்சாலைகள் முறையே 2012 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் களுபோவிடயான தொழிற்சாலை கம்பனிக்கு செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக சாட்டப்பட்டதுடன் கம்பனியினால் தேயிலை சக்தி நிதியத்தினை நடாத்திச் செல்வதில் காணப்பட்ட சிக்கல்கள் காரணமாக நிதியத்திற்கு 2015 ஏப்ரல் 09 திகதி ரூபா.50 மில்லியனான கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது.<br>அமப/19/0743/117/024 ஆம் இலக்க 2019 மார்ச் 19 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய இந்த தொகை மற்றும் உரிய வட்டிக்கு ஹினிதும மற்றும் மனிக்டிவல தேயிலை தொழிற்சாலைகளின் உரித்து சட்டரீதியாக கம்பனிக்கு சுவீகரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் கைத்தொழிற்சாலைகளின் சட்ட ரீதியான உரித்து மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை தீர்மானத்திற்கமைய ஹினிதும ஹில்ஸ் மற்றும் மனிக்டிவல ஆகிய தேயிலை தொழிற்சாலைகள் எமது கம்பனிக்கு தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கு சாட்டப்பட்ட போதிலும் காணியின் உரித்து நிறுவனத்திற்கு சுவீகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் இதுவரையிலும் இடம்பெற்றவாறு உள்ளதுடன் இந்த ஆண்டில் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சரவை தீர்மானத்திற்கமைய தேயிலை தொழிற்சாலைகளின் உரித்தினை கம்பனிக்கு சுவீகரிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | களுபோவிடியான தேயிலை தொழிற்சாலை வளாகத்தில் அமைந்துள்ள சுற்றுலா விடுதியினை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் ஒரே முறையில் இடம்பெற்றிராமையால் நீண்ட காலமாக இந்நிலைமை காணப்பட்டமையால் பழுது பார்ப்பதற்கு அதிக கிரயம் மேற்கொள்ள நேர்வதுடன் அதன் ஆக்கபூர்வமான ஆயுட்காலத்திற்கும் பாதகமான முறையில் தாக்கம் செலுத்தும் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | குறித்த கட்டிடம் 2017 ஆம் ஆண்டில் சுற்றுலா விடுதி ஒன்றாக மாற்றப்பட்டுள்ளதுடன் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சுற்றுலா விடுதிகளின் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த சந்தர்ப்பங்களில் கூரை புனரமைப்பு இடம்பெறவில்லை. கடந்த சில வருடங்களில் வருடாந்த மதிப்பீட்டில் உத்தியோகபூர்வ இல்லத்தின் பழுதுபார்த்தல் பணிகளுக்கு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கம்பனியின் | பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்வதன் மூலம் சொத்துக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிதிநிலைமை தொடர்பில் கருதும் போது உத்தியோகபூர்வ இல்லங்களின் பழுது பார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. அதற்கமைய 2022/2023 ஆம் ஆண்டில் கம்பனியின் நிதி நிலைமை சிறந்ததாக காணப்படுகின்றமையால் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் பெறுகை நடைமுறையை பின்பற்றி 2022/23 வருடத்தில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேயிலை சக்தி நிதியம் ஆரம்பிக்கப்பட்ட ஹினிதும ஹீல்ஸ் மற்றும் மனிக்டிவல தேயிலை தொழிற்சாலைகளின் உற்பத்தி பணிகளுக்காக சாட்டுதல் செய்து இந்த இரு கைத்தொழிற்சாலைகள் பொதுத்திறைசேரிக்கு செலவின சுமையொன்றாக இல்லாதவாறு இலாபமீட்டும் முறையில் பேணிச் செல்வதற்குரிய அனைத்து பணிகளும் கம்பனியினால் மேற்கொள்ளப்பட வேண்டுமென அமப/19/0743/117/024 ஆம் இலக்க மற்றும் 2019 மார்ச் 19 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு இந்த கைத்தொழிற்சாலைகள் வழங்கப்பட்ட பின்னர் மீளாய்வாண்டு வரையிலும் தொடர்ச்சியாக நட்டமீட்டும் நிலையில் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போதும், இரு தொழிற்சாலைகளினதும் வருடாந்த நட்டத்தினை கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 06 சதவீதத்தால் குறைவடைந்திருந்த போதிலும், மீளர்வாண்டின் இறுதியில் உள்ளபடியான திரண்ட நட்டம் ரூபா 131,185,760 ஆகும். | குறித்த தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் முறையான சாத்தியவள கற்கை ஒன்று மேற்கொள்ளப்படவில்லை. இந்த தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி இயலளவுக்கமைய கொழுந்து கிடைக்காமை, தொடர்ச்சியாக நட்டமீட்டியமைக்கு தாக்கம் அளித்துள்ளது. எவ்வாறான போதிலும் 2022/2023 நிதியாண்டு முதல் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்தும் நடவடிக்கைகளின் ஊடாக கொழுந்து விநியோகஸ்தர்கள் பலரை ஈர்த்துக் கொள்வதற்கு இயலுமானதாகி உள்ளது. தொழிற்சாலைகளுக்கு நிதி செயலாற்றல் குறிகாட்டிகளை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் ஒவ்வொரு பதவியணியினதும் ஊழியர்களுக்காகவும் கடமை இலக்குகள் வழங்கப்பட்டுள்ளன. ஆண்டின் இறுதியில் செயலாற்றலுக்காக கிடைக்கும் புள்ளிகளின் அடிப்படையில் செயல் பதவியணியின் படிகள் மற்றும் ஏனைய வரப்பிரசாதங்கள் தீர்மானிக்கப்படும். மேலும் தொழிற்சாலை நவீன | அமைச்சரவை தீர்மானத்திற்கமைய பொது திறைசேரிக்கு செலவின சுமையொன்றாக மாறாத வகையில் இலாபமீட்டும் முறையில் தேயிலை தொழிற்சாலையை நடாத்திச் செல்வதற்கு உரிய அனைத்து நடவடிக்கையும் கம்பனியினால் முன்னெடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மயப்படுத்தப்பட்டுள்ளதுடன் MIS, CCTV கட்டமைப்பின் ஊடாக தொழிற்சாலை நிர்வகிக்கப்படுகிறது. மேலும் இலங்கை அரசு பெருந்தோட்ட கம்பனியில் கொழுந்துகள் மனிக்டிவல தொழிற்சாலைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | களுபோவிடியான தேயிலை தொழிற்சாலை தேயிலை துறையில் மொத்த நிலப்பரப்பின் பிரகாரம் 21,050 எண்ணிக்கையிலான தேயிலை புதர்களை மாத்திரம் பயிரிட முடியுமான போதிலும் தேயிலை தொழிற்சாலையின் பயிரிடப்பட்ட பூமியில் 13,100 இற்கும் குறைவான மட்டத்தில் தேயிலை கன்றுகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் அந்த துறையில் தேயிலை கன்றுகளின் ஆயுட்காலம் சுமார் 17 வருடங்கள் பழமையானதாக காணப்பட்டமையால் எதிர்பார்த்த கொழுந்தின் அளவிலும் 35 சதவீதத்திற்கு குறைவான மட்டத்திலான அறுவடையே காணப்பட்டது. தேயிலை துறையின் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | களுபோவிடியான தேயிலை தொழிற்சாலையில் தேயிலை நிலப்பரப்பு தற்போது சுமார் 17 வருடங்களுக்கு முன்னர் பழமையானதாக காணப்படுவதுடன் கவ்வாத்து வெட்டும் சுழற்சி 06 இற்கு மேற்பட்ட அளவு இடம்பெற்றுள்ளது. அதற்கமைய அண்ணளவாக 5 சதவீதமான அளவு ஒரு கவ்வாத்து தடவையில் மரணம் அடைவதுடன் அதனால் உச்ச மட்டத்தில் அறுவடையை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. மேலும் தொழிற்சாலை நிலப்பிரதேசத்தில் பணிகளுக்கு ஊழியர்கள் இல்லாதிருந்தமை மற்றும் தொழிற்சாலையின் மூலம் வழங்கப்படும் சம்பளம் போதுமானதாக இல்லாதிருந்தமை ஆகியன இதற்கு நேரடியாக தாக்கம் அளித்துள்ளது. சிறு தேயிலை அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக தேயிலை மீள் பயிரிடுவதற்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன் மீள் பயிரிடல் நடவடிக்கைகளுக்கு ஆரம்பத் திட்டம் இடம்பெற்றவாறு உள்ளது. | கால அடிப்படையில் மீள் பயிரிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் ஊழிய பயன்பாட்டிற்கு மாற்று முறைமையொன்று தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |